11 OCT 2

# Eastern University, Sri Lanka
## Faculty of Arts and Culture
## Fourth Year Second Semester Examination in Bachelor of Arts (Economics Special) 2013/2014
### ECOS 4204: Environmental Economics

Answer all Questions Time: Three Hours

1 i. ஒரு பொருளாதாரத்தில் நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளன் செயற்பாடுகள் எவ்வாறு சூழல் பிரச்சினையை உருவாக்குகிறது என ஆராய்க.

(10 புள்ளிகள்)

ii. ஒரு பொருளாதாரத்தின் வருமான சுற்றோட்டம் சூழல் சமநிலை மாற்றத்தின் மூலம் எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதை வரைபடத்தினை பயன்படுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2. i. வெளிவாரி விளைவு என்பதன்மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது? வெளிவாரி விளைவு எவ்வாறு சந்தைதோல்விக்கு இட்டுச்செல்கிறது என்பதை வரைபட உதவியுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. தனிநபர் கேள்வியினை சந்தை கேள்வியில் இருந்து வேறுபடுத்துக. சுத்தமான வளியினைப்பெறுவதற்கான கேள்வி மற்றும் நிரம்பலினை எவ்வாறு வரையறுப்பீர்?

(06 புள்ளிகள்)

iii. எல்லை சமூக நலன் (MSB), எல்லை சமூக செலவு (MSC), எல்லை வெளிவாரி செலவு (MEC) என்பவற்றை வரைபட உதவியுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3. i. ஒரு உற்பத்தியாளன் உற்பத்தி விருத்தி சூழல் தொடர்பான சட்டங்களை பேணல் தொடர்பில் எவ்வாறான சவால்களை எதிர்நோக்குகின்றான் என ஆராய்க

(05 புள்ளிகள்)

ii. மாசுபடுத்தும் உரிமையை தொடர்பாக அனுமதிப்பத்திர முறைமையை உதாரணத்துடன் விளக்குக.

(07 புள்ளிகள்)

iii. சூழல் மாசடைவதனைக்கட்டுப்படுத்துவதில் நேரடிக்கட்டுப்பாட்டுமுறையின் பண்புகளை குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4. i. பாதிப்பு தொழிற்பாட்டு முறை (Damage Function Method) எவ்வாறு சூழல் நல மதிப்பீட்டாய்விற்கு பயன்படுத்தப்படுகின்றது என கூறுக. (08 புள்ளிகள்

ii. கெடோனிக் (Hedonic Price Method (HPM)) ஆனது எவ்வகையான சூழல் நல மதிப்பீட்டாய்விற்கு பொருத்தமானது என விளக்குக. (06 புள்ளிகள்

iii. சூழல் நல மதிப்பீட்டாய்வில் செலவு தவிர்ப்பு முறையினை (Averting Expenditure Method) விளக்குக. (06 புள்ளிகள்

(மொத்தம் 20 புள்ளிகள்

5. i. Kuznet மாதிரியானது எவ்வாறு சூழல் தொடர்பான ஆய்வுகளுக்கு பிரயோகிக்கப்படுகின்றது என விளக்குக.

(07 புள்ளிகள்

ii சுற்றுலாத்துறையின் வளர்ச்சியானது எவ்வாறு சூழல்தொடர்பான பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது என ஆராய்க

(07 புள்ளிகள்

iii. உள்ளகமாசு (Indoor Pollution) என்றால் என்ன? இதன் தாக்கம் எவ்வாறு மனிதவள அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்த முடியும் எனபதை ஆராய்க.

(06 புள்ளிகள்

(மொத்தம் 20 புள்ளிக